DEPOSITION OF WITNESS.

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, SIVAGANGAI

S.C.No. 70/2021

PROSECUTION WITNESS No - PW-10

| Name : | மருத்துவர்.செந்தில்குமார் | Caste: | |
|---|---|---|---|
| Father Name | வெள்ளையன் | Calling: | மருத்துவர் |
| Village: | காரைக்குடி | Religion: | |
| Taluk: | காரைக்குடி | Age: | 39 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 06th day of November 2024

எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜரில்லை. அவர்களுக்கான மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>**முதல் விசாரணை:**</u>

1) நான் தற்போது அரசு சிவகங்கை மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவத்துறையில் உதவிப்பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 19.06.2021 அன்று மேற்கண்ட மருத்துவமனையில் மேற்கண்ட துறையில் பணியிலிருந்த போது பூவந்தி காவல்நிலைய குற்றஎண்.124/2021 வழக்கில் சம்மந்தப்பட்ட இறந்த இராமராஜன் என்பவரது பிரேதபரிசோதனை வேண்டுகோள் கடிதத்தை அதே காவல்நிலைய காவல்ஆய்வாளர் அவர்களிடமிருந்து பெறப்பட்டு அதே காவல்நிலைய முதல்நிலைக்காவலர் விக்னேஷ் எண்.2178 என்பவரால் பிரேதத்தை அடையாளம் காட்ட எனது பிரேத பரிசோதனையை தொடங்கினேன். பிரேதத்தில் கீழ்கண்டவாறு வெளிப்புறக்காயங்கள்:

1. 20x5செமீx முதுகெலும்பு ஆழம் வரை அளவிளான வெட்டுக்காயம் ஒன்று கழுத்தின் பின்பக்கத்தில் காணப்பட்டது. அதை கூராய்வு செய்ததில் அதன் பாகத்தில் உள்ள அனைத்து சதை நரம்புகள் வெட்டப்பட்டு c3 மற்றும் c4 முதுகெலும்பு வரை ஆழமாக வெட்டப்பட்டு காணப்பட்டது.

2. 18x5செமீ x எலும்பு ஆழம் வரை அளவிளான வெட்டுக்காயம் ஒன்று வலதுபக்க முகத்திலிருந்து வலதுபக்க காதுவரை காணப்பட்டது. அதை கூராய்வு செய்ததில் அதன் பாகத்தில் உள்ள அனைத்து சதைகளும் மற்றும் கண்ண எலும்பு தாடை எலும்புகள் முறிந்து காணப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2024.11.06 15:41:53 +0530

3. 10x2செமீ x எலும்பு ஆழம் வரை அளவிளான வெட்டுக்காயம் ஒன்று வலதுபக்க முகத்தில் காணப்பட்டது. காயமானது 2வது காயத்திலிருந்து 2செமீக்கு கீழ் காணப்பட்டது. அதை கூராய்வு செய்ததில் அதன் பாகத்தில் உள்ள அனைத்து சதைகளும் மற்றும் கண்ண எலும்பு தாடை எலும்புகள் முறிந்து காணப்பட்டது.

4. 13x2செமீ x எலும்பு ஆழம் வரை அளவிளான வெட்டுக்காயம் ஒன்று வலதுபக்க முகத்தில் காணப்பட்டது. காயமானது 3வது காயத்திலிருந்து 2செமீக்கு கீழ் காணப்பட்டது. அதை கூராய்வு செய்ததில் அதன் பாகத்தில் உள்ள அனைத்து சதைகளும் மற்றும் கண்ண எலும்பு தாடை எலும்புகள் முறிந்து காணப்பட்டது.

5. 12x3செமீx முதுகெலும்பு ஆழம் வரை அளவிளான வெட்டுக்காயம் ஒன்று முன்கழுத்துப்பகுதியில் காணப்பட்டது. அதை கூராய்வு செய்ததில் அதன் பாகத்தில் உள்ள அனைத்து சதை நரம்புகள், சுவாசக்குழாய், உணவுக்குழாய்கள், தைராய்டு அனைத்தும் வெட்டப்பட்டு c4 மற்றும் c5 முதுகெலும்பு வரை ஆழமாக வெட்டப்பட்டு காணப்பட்டது.

6. 10x1செமீ அளவிற்கு கழுத்தின் கீழ் பின்பகுதியில் சீரான கன்றிய இரத்தக்காயம் ஒன்று.

தலையை கூராய்வு செய்ததில் தலை எலும்பு சீராக காணப்பட்டது. மூளை வெளிறிக் காணப்பட்டது. முகப்பக்கவாட்டில் காயம் எண்.2, 3, 4ற்கு ஏற்ப வெட்டுக்காயங்கள் காணப்பட்டது. குரல்வளை எலும்பு சீராக காணப்பட்டது. அனைத்து உள்ளுறுப்புகளும் வெளிறிக்காணப்பட்டது. வயிற்றுப்பகுதியில் 100மிலி அளவிற்கு மஞ்சள்நிற திரவமும் அதனுடன் 50கி அளவிற்கு பாதி செரிமானமான உணவுப்பொருள் காணப்பட்டு அதில் ஒரு வித நெடியும் காணப்பட்டது. முதுகெலும்பை சீராய்வு செய்தபோது காயங்கள் 1 மற்றும் 5ற்கு ஏற்ப வெட்டுப்பட்டு காணப்பட்டது.

இறந்தவரின் உள்உறுப்புகளை இராமநாதபுரம் தடயஅறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி அதன் அறிக்கை எண்.522/2021 நாள் 23.07.2021 படி இறந்த ராமராஜ் என்பவர் உடம்பில் ஏற்பட்ட பலதரப்பட்ட வெட்டுக்காயத்தினால் அதிக இரத்தப்போக்கு ஏற்பட்டு அதிர்ச்சியால் இறந்திருக்கலாம் என நான் சான்று வழங்கினேன். இறந்தவர் இறக்கும் தருவாயில் மது அருந்தியதற்கான சான்று இராமநாதபுரம் தடய அறிவியல் அறிக்கையில் காட்டப்பட்டுள்ளது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2024.11.06 15:42:00 +0530

பிரேத பரிசோதனை அறிக்கை, **அ.சா.ஆ.10** விஸ்ரா அறிக்கை, **அ.சா.ஆ.11** இறுதி கருத்துரை **அ.சா.ஆ.12** பயாலஜி அறிக்கை **அ.சா.ஆ.13** , சீராலஜி அறிக்கை **அ.சா.ஆ. 14** கெமிக்கல் அறிக்கை **அ.சா.ஆ .15**-ஆக குறியீடு செய்யப்படுகிறது. இறந்து போன நபரை கத்தியால் தாக்கினால் இவ்வாறான காயங்கள் ஏற்பட வாய்ப்புண்டு. இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

ஒன்றுக்கு மேற்பட்ட ஆயுதங்களால் இரண்டிற்கு மேற்பட்ட நபர்களால் வெவ்வேறு திசைகளிலிருந்து தாக்கும் போது இவ்வாறான காயங்கள் ஏற்பட வாய்ப்புண்டா என்றால் பிரேத பரிசோனை அறிக்கையில் தற்காப்பு காயங்கள் எதுவும் காணப்படாததால் இரண்டிற்கு மேற்பட்ட நபர்கள் தாக்கியிருக்க வாய்ப்புண்டு. ஆயுதங்களை காண்பித்து ஆய்வாளர் என்னிடம் கருத்துரை பெறவில்லை என்றால் சரிதான். பிரேத பரிசோதனை அறிக்கையில் இறப்பிற்கான நேரம் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

**<u>மறு விசாரணை</u>**. இல்லை

சாட்சி கூறியதை என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டி, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

SWARNAM J NATARAJAN Digitally signed by SWARNAM J NATARAJAN Date: 2024.11.06 15:42:08 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
சிவகங்கை